

மதுரை மாவட்டம் மேலூர் நகராட்சியில் கட்டப்பட்டுள்ள கர்னல் பென்னிகுவிக் பேருந்து நிலையம், வார்டு எண் 23, அம்மன் நகரில் கட்டப்பட்டுள்ள அறிவுசார் மையம் மற்றும் நூலகம், சிவன் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள நகராட்சி தொடக்கப்பள்ளி கட்டிடம் உள்ளிட்ட நலத்திட்ட பணிகளை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் திறந்து வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார், நகராட்சி சேர்மன் முகமது யாசின் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

### இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து சிறைபிடிப்பு!

# உடனடியாக விடுவித்திட தூதரக நடவடிக்கை எடுப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, ஜன. 13-

ராமேஸ்வரம் மீன்பிடித் துறை முகத்திலிருந்த மீன்பிடிக்கச் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக 12.01.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்க ளது மீன்பிடிப் படகுகளையும் உடன டியாக விடுவித்திட வலுவான மற்றும் பயனுள்ள தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய் சங்கர் அவர்களுக்கு நேற்று (12.01.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் இலங்கை கடற்ப டையினரால் நமது மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதை ஆழ்ந்த கவலையுடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், நேற்று (12.01.2025) இராமேஸ்வரம் மீன் பிடித் துறைமுகத்தி லிருந்து மீன்பிடிக் கச் சென்ற எட்டு தமிழக மீனவர் களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர் என்றும் அவர் களது இரண்டு மீன்பிடி விசைப்படகு களையும் பறிமுதல் செய்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் நமது மீனவர்கள் அடிக்கடி சிறைபிடிக் கப்படுவதால், மீனவ சமுதாயத்தினரி டையே அச்சத்தையும், நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர்களது பாரம்பரிய வாழ் வாதார வருவாய் ஆதாரங்கள் பாதிக்கப்படுவதாகவும் தனது கடிதத் தில் தெரிவித்துள்ளார்.

எனவே மீனவர்கள் கைது செய் யப்படுவதை தடுப்பதற்கு உரிய தூத ரக நடவடிக்கைகள் மூலம் நிரந்தர தீர்வு காண வேண்டியது அவசியம் என்றும் தனது கடிதத்தில் தெரிவித் துள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அனைத்து மீன வர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் விரைவில் விடு விப் பதை உறுதி செய்வதற்கு உரிய தூத ரக வழிமுறைகள் மூலம் வலுவான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சி களை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்க ளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதல மைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தமிழர் திருநாளாம்

# பொங்கல் திருநாளை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாட ஏற்பாடு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

**சென்னை, ஜன.13-**

**தமிழர் திருநாளாம் பொங்கல் திரு நாளை தமிழ்நாடு முழுவதும் பல்வேறு துறைகள் சார்பில் சிறப்பாக கொண்டாடப்ப டுகிறது என தமிழ்நாடு அரசு தெரிவித் துள்ளது.**

இதுகுறித்து அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

'பொங்கலோ பொங்கல்" என்று சொல் லும்போதே மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்குகிறது. புத்துணர்வு பொங்கி வழி கிறது. உள்ளமெல்லாம் பூரிப்பு பிறக்கிறது. நம் ஊனோடு, உயிரோடு, உணர்வோடு கலந்த விழாவாகத் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டு வரு கிறது.

பொங்கல் திருநாள் நான்கு நாட்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. பழையன கழிந்து புதியன புகும் நாளாக மார்கழி கடைசி நாளன்று போகி. தமிழர் திருநா ளாம் பொங்கல் தை முதல் நாளன்று கொண்டாடப்படுகிறது. வானம் கொடுத் தது; பூமி பெற்றது என்ற அன்பான உறவை நிலத்தின் மீது நின்று வான்நோக் கிக் கரம் குவித்து உதயசூரியனை வணங் கும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. "சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அத னால் உழந்தும் உழவே தலை" என்ற அய்யன் வள்ளுவர் குறளிற்கேற்ப, வேளாண் பெருங்குடி மக்களுக்கு நன்றி மற்றும் அவர்களுக்கு உறுதுணையாக விளங்கும் கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் தை இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படு கிறது. நிறைவு நாளில் காணும் பொங்கல் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் மக்கள் அனைவரும் தங்கள் உற்றார் உறவினர் களைச் சந்தித்துத் தங்கள் அன்பையும், உணவுப் பண்டங்களையும் பகிர்ந்து மகிழ்வர்.

**தமிழர்களின் பெருமித அடையாளம் - ஜல்லிக்கட்டு:**

தமிழர்களின் பெருமித அடையாள மான ஜல்லிக்கட்டு போட்டி ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளையொட்டி நடத்தப்படுகிறது. ஏறு தழுவல், மஞ்சு விரட்டு அல்லது சல்லிக்கட்டு (ஜல்லிக் கட்டு) எனப் பல்வேறு பெயர்களில் இது குறிப்பிடப்படுகிறது. தமிழ்நாட்டின் பல் வேறு மாவட்டங்களிலும் ஜல்லிக்கட்டு போட்டி நடத்தப்பட்டாலும், மதுரை மாவட் டத்தில் நடைபெறும் அவனியாபுரம், அலங்காநல்லூர், பாலமேடு ஆகிய மூன்று இடங்களில் நடத்தப்படும் ஜல்லிக் கட்டு போட்டி உலகப்புகழ் பெற்றது. அதி லும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு உல கப்புகழ் பெற்றதாகும்.

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப் பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகத்த ரத்துடன் கட்டப்பட்ட கலைஞர் நூற் றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.1.2024 அன்று திறந்து வைத்தார். இந்த அரங்கம் தமிழ்நாட்டின் பண் பாட்டை வெளிப்படுத்தும் பாரம்பரிய விளையாட்டுகளை பிரபலப் படுத்துவதற் கும் பாதுகாப்பதற்கும் உருவாக்கப்பட்ட நவீன அரங்காக அமைந்துள்ளது.

சுற்றுலாத்துறை மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் விழாக்கோலம்:

தமிழ்நாடு அரசின் சுற்றுலாத்துறை யின் மூலமாக பொங்கல் சுற்றுலா விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பொங்கல் சுற்றுலா விழாவானது தமிழ் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இயற் கையான சூழலுடன் அமைந்த ஒரு கிரா மத்தைத் தெரிவு செய்து மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகி றது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி களை கிராமத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு பாரம்பரிய முறைப்படி அவர்க ளுக்கு வரவேற்பு அளித்து, அவர்களுடன் ஒன்றுகூடி புத்தாடை உடுத்தி, புதுப்பானை யில் பொங்கலிட்டு மகிழ்ச்சியாகக் கொண் டாடப்படுகிறது.

**விளையாட்டுப் போட்டிகள்:**

கிராமிய நடனம், சிலம்பாட்டம், பரத நாட்டியம் போன்ற நிகழ்ச்சிகள் வெளிநாட் டுச் சுற்றுலாப் பயணிகளும் கலைஞர்களு டன் இணைந்து நடனமாடி மகிழ்வார்கள். பாரம்பரிய விளையாட்டுகளான பல்லாங் குழி, தாயம், அச்சாங்கல், கோ - கோ விளையாட்டு, பம்பரம் விடுதல், கோலி விளையாட்டு போன்ற விளையாட்டு களும், இசை நாற்காலிப் போட்டி, உறி அடித்தல் போட்டி, கயிறு இழுக்கும் போட் டிகள், வழுக்கு மரம் ஏறும் போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர் களுக்குப் பரிசுகளும் வழங்கப்படுகிறது.

இன்றைய மாறிவரும் நவீன வாழ்க் கைச் சூழலில் மறந்து வரும் நமது பாரம் பரிய நெறிமுறைகளை வளர்ந்து வரும் நம் தமிழ்நாட்டின் அடுத்த தலைமுறையி னரும் அறிந்திடும் வகையில் பொங்கல் சுற்றுலா விழா ஒவ்வொரு ஆண்டும் சிறப் பாக நடத்தப்பட்டு வருகிறது.

**'சென்னை சங்கமம்- நம்ம ஊரு திரு விழா':**

பொங்கல் திருநாளை யொட்டி, தமிழ் மண்ணின் கலைகளைக் களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாந கரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச் சிகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் "சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா" கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டிற்கான 'சென்னை சங்க மம்- நம்ம ஊரு திருவிழா' சென்னை, கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ.வெ.ரா நெடுஞ் சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத் திடலில் 13.1.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படுகிறது. இதில் தமிழ் நாட்டின் புகழ் பெற்ற 250 கலைஞர்கள் இணைந்து நடத்தும் மாபெரும் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடை பெறவுள்ளன.

மேலும், சென்னையில் 18 இடங்களில் 14.1.2025 முதல் 17.1.2025 வரை நான்கு நாட்கள் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெற உள்ளன. இவ்விழாவில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டுள்ள 1500-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நையாண்டி மேளம், கரகாட் டம், காவடியாட்டம், புரவியாட்டம், இறை நடனம், தப்பாட்டம், துடும்பாட்டம், பம்பை யாட்டம், கைச்சிலம்பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவை யாட்டம், கோலாட் டம், ஜிக்காட்டம், ஜிம்பளா மேளம், பழங் குடியினர் நடனம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம், வில்லுபாட்டு, கணியன் கூத்து, தெருக்கூத்து, பாவைக்கூத்து, தோல்பா வைக்கூத்து, நாடகம், கிராமிய ஆடல், பாடல் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட நாட் டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். அத்துடன் புகழ்பெற்ற செவ்வியல் மற்றும் மெல்லிசைக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், கேரளத்தின் தெய்யம் நட னம், மகாராஷ்டிராவின் லாவணி நடனம், ராஜஸ்தான் கூமர் நடனம், மேற்கு வங்கா ளம் தனுச்சி நடனம், கோவாவின் விளக்கு நடனம், உத்தராகண்ட்டின் சபேலி நட னம் ஆகிய பிற மாநிலக் கலை நிகழ்ச்சி களும் நடைபெறவுள்ளன. விழா நடைபெ றும் இடங்களில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் விரும்பி உண்ணும் பல உணவு வகைகளைக் கொண்ட அரங் குகள் அமைக்கப்பட்டு உணவுத்திருவிழா வும் நடைபெறவுள்ளது.

சென்னை சங்கமம்- நம்ம ஊரு திரு விழா நிகழ்ச்சியைத் தொடர்ந்து கோயம் புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் ஆகிய எட்டு நகரங்களி லும் இந்த ஆண்டு சங்கமம் - நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட வுள்ளன.

பொங்கல் பண்டிகையையொட்டி, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு கல்லூரி களில் மாணவ, மாணவியர் பாரம்பரிய உடை அணிந்து பொங்கலிட்டு, ஆட்டம் பாட்டத்துடன் பொங்கல் பண்டிகை யைக் கொண்டாடுகின்றனர்.

தமிழர் திருநாளாம் பொங்கலைப் பொதுமக்கள் உற்சாகமாகவும் மகிழ்ச்சியு டனும் கொண்டாடிடும் வகையில், கிரா மிய மற்றும் கலை நிகழ்ச்சிகள், பாரம்ப ரிய விளையாட்டுப் போட்டிகள் போன்றவை தமிழ்நாடு அரசால் பல்வேறு துறைகளின் மூலம் நடத்திட ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### திராவிட இயக்கம் உற்சாகத்தோடு கொண்டாடும் திருநாள்:

# "தமிழர்களுக்கென்று ஒரு விழா என்றால் அது பொங்கல்தான்!"

## கொளத்தூர் தொகுதியில் பொங்கல் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமித உரை!

சென்னை, ஜன.13-

திராவிட இயக்கம் உற்சாகத்தோடு கொண்டாடும் திருநாள் என்றும், தமிழர் களுக்கென்று ஒரு விழா என்றால் அது பொங்கல்தான் என்றும் கொளத்தூர் தொகுதியில் பொங்கல் விழாவில் முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற் றுகையில்பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

கொளத்தூர் தொகுதியில் நேற்று முன்தினம் (11.1.2025) நடைபெற்ற பொங்கல் திருநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

எத்தனை நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும், என் கொளத்தூர் தொகு தியில் எனது மக்களுடன் கலந்துகொள் ளும் நிகழ்ச்சி எனக்கு எப்போதுமே 'ஸ்பெஷல்! அதுவும் அது பொங்கல் விழா என்றால், அது எவ்வளவு ஸ்பெஷல் எனச் சொல்லவா வேண்டும்! ஒரு வார மாகச் சட்டமன்றக் கூட்டத்தொடர், அதில் பரபரப்பான பல நிகழ்வுகள் என்று எல்லா வற்றையும் முடித்துவிட்டு நேராக இங்கே தான் வந்திருக்கிறேன்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2025) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் மாணவ, மாணவியர்களுடன் சமத்துவ பொங்கல் வைத்து, 1000 நபர்களுக்கு புத்தாடைகள் மற்றும் பச்சரிசி, வெல்லம், பாசிப்பருப்பு, முந்திரி, திராட்சை, ஏலக்காய், நெய், கரும்பு, குடை, பிளாஸ்க், டிபன் பாக்ஸ் மற்றும் காலண்டர் கொண்ட பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கி, வாழ்த்தினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின், மேயர் பிரியா ராஜன் மற்றும் பலர் உள்ளனர்.

**கொளத்தூர் தொகுதிக்கு வந்தாலே மகிழ்ச்சிதான்!**

எனக்கு 'எனர்ஜி' வேண்டுமென்றா லும் நீங்கள்தான், கொஞ்சம் 'ரிலாக்ஸ்' ஆகவேண்டும் என்றாலும் கொளத்தூர் தான். அதுவும் தமிழர்களின் தனிப்பெ ரும் விழாவான பொங்கல் திருநாளை உங்களுடன் சேர்ந்து கொண்டாடுவதை விட வேறென்ன மகிழ்ச்சி இருக்க முடி யும்!

பொங்கலையும் தி.மு.க.வையும் பிரிக்க முடியாது. திராவிட இயக்கம் மிக உற்சாகத்தோடு கொண்டாடும் ஒரு திரு நாள் என்றால் அது பொங்கல் திருநாள்தான். ஏனென்றால், இதில் மதம் இல்லை! சாதி இல்லை! வன்முறை இல்லை! உழைப்பைப் போற்றும் தத்து வம்தான் இருக்கிறது. சமத்துவம் இருக் கிறது! தமிழர்களின் பண்பாடும், வீரமும், கொண்டாட்டமும் நிறைந்த விழா பொங் கல் விழா!

தந்தை பெரியாரே சொல்லியிருக்கி றார். "தமிழர்களுக்கென்று ஒரு விழா என்றால் அது பொங்கல்தான்" என்று சொன்னவர் பெரியார். அதுவும் ஒரு பொங்கல் வாழ்த்துச் செய்தியில், "திருக் குறளை உங்களுக்குப் பொங்கல் பரிசா கத் தருகிறேன்" என்று சொன்னார் பெரி யார். திராவிடநாடு, முரசொலி என நம் இயக்க இதழ்கள் எல்லாம் பொங்கலுக் குத்தான் 'சிறப்புமலர்' கொண்டுவருவார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் முதல மைச்சரானதும், தை பிறப்பில் இருந்து திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கு தொடக்கம், பொங்கல் இரண்டாம் நாள் திருவள்ளுவர் நாளாக அறிவிப்பு எனப் பொங்கலைச் சிறப்பிக்கப் பல முயற்சி களை எடுத்தார்.

இந்த ஆண்டு, பொங்கல் திருநாளைத் தமிழ்நாட்டு மக்கள் எல்லோரும் சிறப் பாக சொந்த ஊர்களில் குடும்பத்தோடும் நண்பர்களோடும் ஒன்றாகச் சேர்ந்து எழுச்சியோடு கொண்டாட வேண்டும் என 17ஆம் தேதி ஒரு நாள் கூடுதலாக விடுமுறையும் விட உத்தரவிட்டுக் கையெழுத்திட்ட கைதான் இந்தக் கை.

அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் உரையாற்றி னார்.

# வாசிப்பு இல்லாத மனிதன் தனது சிந்தனைகளை புதுப்பித்துக்கொள்ள முடியாது!

## முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வாசகர் சந்திப்பு நிகழ்ச்சியில் கவிஞர் சல்மா பேச்சு!



சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாச கர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சியை முத்தமி ழறிஞர் பதிப்பகம் நடத்தி வருகிறது. இதில் 10.01.2025 அன்று தி.மு.க. செய்தித்தொடர்பு இணைச்செயலாளர் கவி ஞர் சல்மா கலந்துகொண்டு பேசினார். வாசகர்கள் பலரும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

அவர் பேசியதாவது:

ஒரு காலத்தில் இலக்கியம் என்றால் அதில் சாதி மேலோங்கி இருந்தது. குறிப்பிட்ட சாதியினர் மட்டும்தான் இலக்கியம் எழுத முடியும். அப்படிப்பட்ட நிலையில் இருந்த இலக்கியத்தை வெகுமக்கள் மத்தியில் கொண்டுவந்து சேர்த் தது திராவிட இயக்கம். கலை மக்களுக்கானது என்ற நிலை யையும் உருவாக்கியது திராவிட இயக்கம். கலையின் மூலம் பகுத்தறிவு சிந்தனைகளை வளர்த்து, சமூக மாற் றத்தை ஏற்படுத்தியது திராவிட இயக்கம்.

திராவிட முன்னேற்றக் கழகம்தான் எழுத்தை ஒரே வடி வத்தில் தேங்கி விடாமல் கவிதை, கதை, நாடகம், சினிமா என பல்வேறு மட்டங்களில் தங்கள் படைப்புத்திறனை மக் களிடத்தில் வெளிப்படுத்தினர். அவற்றின் ஊடாக தங்கள் கொள்கைகளை மக்களிடத்தில் கொண்டு சேர்த்தனர். அத னால் ஏற்பட்ட சமூக மாற்றத்தை விரும்பாத கூட்டம் இன் றைக்கும் இருக்கிறது. அதனால்தான் அந்த கூட்டம் நவீன இலக்கியங்களில் திராவிட இலக்கியத்தை ஏற்றுக்கொள்ள வில்லை. அண்ணா, கலைஞரை இணைத்துக்கொள்வ தில்லை. இந்த இடத்தில் ஒரு சூழ்ச்சி கையாளப்பட்டிருக்கிறது.

**திராவிட இலக்கியத்தின் தாக்கம்!**

கலைஞரின் பராசக்தி ஏற்படுத்திய தாக்கம் எல்லோருக் கும் தெரியும். அதுபோல, தன்னடக்கம் என்ற ஒரு கதையை கலைஞர் எழுதியுள்ளார். அந்த கதையில் பிளேக் நோய் வந்து பலர் இறக்கும்போது, கடவுளுக்கு என்ன வேலை? ஏன் காப்பாற்றவில்லை என்று உடலை அடக்கம் செய்யும் பணியில் ஈடுபட்டிருப்பவர் கேட்பது போல அந்த கதை எழு தப்பட்டிருக்கும். அதேபோல குப்பைத்தொட்டி என்று ஒரு கதை உள்ளது. இல்லஸ்டிரேட் வீக்லியில் இந்த கதை மொழிபெயர்க்கப்பட்டபோது, அதற்கு எதிராக சிலர் போராட் டத்தை முன்னெடுத்தனர். ஆனால் கதையை நிறுத்தக்கூடாது என ஆயிரக்கணக்கானோரிடம் இருந்து கடிதங்கள் வந்து குவிந்தன.

ஆக, ஒரு சில இலக்கியவாதிகளோ, எழுத்தாளர்களோ புறக்கணிப்பதனால் திராவிட இயக்கத்திற்கும் இலக்கியத்திற் கும் சம்மந்தம் இல்லை என்றாகிவிடாது. இன்றைக்கு கலை ஞர், அண்ணாவின் பெயரால் திராவிட முன்னேற்றக் கழ கம் நூலகங்களை உருவாக்கி இருக்கிறது. அறிவுசார் சொத்தாக நூலகங்களை ஊர் ஊராக ஏற்படுத்தி வருகிறது.

**வெற்றிபெற வாசிப்பு தேவை**

30 ஆண்டுகளுக்கு முன்பு பெண் குழந்தைகளை கல்வி கற்க அனுமதிக்காத சமூக சூழல் என்னுடையது. அத்த கைய சூழலில் என்னுடைய பாதை, அடையாளம், வாழ்க் கையை நானே தீர்மானிக்க உதவியது நூல்கள்தான். அதில் இரண்டு வகையான நூல்கள் கிடைத்தன. ஒன்று சோவியத் இலக்கியங்கள். மற்றொன்று பெரியார், அண்ணா சார்ந்த திராவிட நூல்கள். மக்கள் மொழியில் எளிமையான நடையில் திராவிட இலக்கியங்கள் இருந்தன. கம்யூனிசம் எதை மக்களுக்கு கற்றுத்தர வேண்டுமென்று நினைத்ததோ, அதைத்தான் திராவிட இலக்கியங்கள் செய் தன. இந்த வாசிப்புதான் எனக்கு எது சரி, எது தவறு என்ற புரிதலை ஏற்படுத்தியது. வாசிப்பு இல்லாத மனிதன் தனது சிந்தனைகளை எந்த வடிவத்திலும் புதுப்பித்துக்கொள்ள முடியாது. வாசிப்பின் ஊடாக நமது கருத்துக்களையும், சிந்தனைகளையும் பெறும்போதுதான் நாம் வெற்றி பெறு வோம்.



வேலூர் மாநகரம் வார்டு எண்:41 பெருமாள் நகர் நியாய விலை கடையில் பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கி மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்த குமார் தொடங்கி வைத்தார். உடன் மாமன்ற உறுப்பினர்கள் ரேகா அன்புநிதி வட்ட கழக செயலாளர்கள் அஸ்லம்கான், தேன்மொழி, நவீன்குமார், பெருமாள், ராஜேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.